**ஜனவரி – 13**

# TNPSC துளிகள்

- இந்திய விமான நிலைய ஆணையத்தின் தகவலின்படி பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்படும் வளர்ச்சியானது சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் 2018-ம் ஆண்டில் நாட்டில் உள்ள பெரிய விமான நிலையங்களில் அமிர்தசரஸ், பக்டோக்ரா மற்றும் பாட்னா விமான நிலையங்களே மிக வேகமாக வளரும் விமான நிலையங்களாகும்.
- சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு ஜனவரி 15-ம் தேதி நடைபெற இருக்கும் அவனியாபுரம் ஜல்லிக்கட்டை மேற்பார்வையிட 24 உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைத்துள்ளது.
    - இந்த குழு ஓய்வு பெற்ற மாவட்ட மற்றும் உள்ளூர் அமர்வு நீதிபதி திரு. சி. ராகவன் தலைமையில் அமைக்கப்படும்.

# தமிழ்நாடு செய்திகள்

## நம்ம சென்னை கைபேசி செயலி

- சென்னைப் பெருநகர மாநகராட்சியானது பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நம்ம சென்னை கைபேசி செயலியில் கூடுதல் வசதிகளை சேர்த்து இருக்கின்றது.
- பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், சொத்து வரி வசூலிப்பு நிலவரம் மற்றும் ரசீது பதிவிறக்கம், தொழில்முறை வரி வசூலிப்பு நிலவரம் மற்றும் ரசீது பதிவிறக்கம், வர்த்தக உரிமை நிலவரம் மற்றும் ரசீது பதிவிறக்கம் ஆகிய அனைத்தும் இந்த செயலியைப் பயன்படுத்தித் தற்போது மேற்கொள்ள முடியும்.
- இச்செயலியைப் பயன்படுத்தி ஆன்லைனில் (நிகழ்நேரம்) பிறப்பு மற்றும் இறப்புச் சான்றுகளில் திருத்தம் செய்ய முடியும்.
- மேலும் இது புகார்களைச் சமர்ப்பிக்கவும் அனுமதிக்கிறது.

## படையெடுக்கும் அன்னிய உயிரினங்களை களையெடுக்க ஒரு குழு

- சென்னை உயர் நீதிமன்றம் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள படையெடுக்கும் அன்னிய வகைத் தாவரங்களைக் களையெடுப்பதற்கு ஒரு தீர்வு கண்டிட ஒரு நிபுணர் குழுவை அமைத்திருக்கின்றது.
- இந்த படையெடுக்கும் உயிரினங்கள் விவசாயம், வனம் மற்றும் நீர்நிலை ஆகிய உயிர்ச்சூழல் சீரழிவுகளை ஏற்படுத்துவதோடு பல்லுயிர்ப் பெருக்கத் தன்மையின் இழப்பிற்கான இரண்டாவது முக்கிய காரணியாகவும் கருதப்படுகிறது.
- இந்த குழு சென்னையில் உள்ள தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தில் உள்ள படையெடுக்கும் உயிரினங்களுக்கான நிபுணர் குழுவின் தலைவரான செருகுரி ராகவேந்திர பாபு என்பவரால் தலைமை தாங்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## ஒரே இடத்தில் உள்ள உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின்னழுத்தக் தொழிற்கூடம்

- ஜம்மு காஷ்மீரின் லடாக்கில் ஒரே இடத்தில் அமைந்திருக்கும் உலகின் மிகப் பெரிய சூரிய ஒளி மின்னழுத்தத் தொழிற்கூடம் அமைக்கப்பட உள்ளது.
- லே என்னுமிடத்திலிருந்து 250 கிலோ மீட்டர் தொலைவிலும் கார்கிலில் இருந்து 200 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்திருக்கும் நியோமா பகுதியில் உள்ள ஹான்லே/கால்தோ என்னுமிடத்தில் இந்த 5000 மெகாவாட் திறன் கொண்ட லடாக் திட்டம் அமைக்கப்படும்.
- இது கார்கில் மாவட்டத்தில் உள்ள 2.5 ஜிகாவாட் திறனுடைய மற்றுமொரு சூரிய ஒளித் திட்டத்தின் மூலம் ஆதரிக்கப்படும்.
- இந்தியாவின் சூரிய ஒளி ஆற்றல் கழக நிறுவனமானது (Solar Energy Corporation of India - SECI), லடாக்கில் உள்ள 5 ஜிகாவாட் சூரிய ஒளி பண்ணை சீனாவின் 3 ஜிகாவாட் டேடாங் சூரிய ஒளித் திட்டத்தை விட அதிக திறன் கொண்ட உலகின் மிகப் பெரிய திட்டமாகக் இருக்கக் கூடும் எனக் கருதுகின்றது.
- இத்திட்டம் 2023-ம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு வருடாந்திரமாக 12,750 டன்கள் அளவிற்கு கார்பன்டை ஆக்சைடையும் இதர பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வுகளையும் மிச்சப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

| TOP 5 SOLAR PV PROJECTS (Single Location) | Present Capacity (MW) | Projected Capacity (MW) | Location |
|---|---|---|---|
| Tengger Desert Solar Park | 1,547 | | Ningxia, China |
| Bhadla Solar Park | 1,365 | 2,255 | Rajasthan, India |
| Datong Solar Power Top Runner Base | 1,000 | 3,000 | China |
| Kurnool | 1,000 | 2,000 | Andhra Pradesh, India |
| Longyanxia Dam Solar Park | 850 | | Eastern Zhejiang, China |
| **Ladakh project** | | **5,000** | **Ladakh, India** |

Source: Solarinsure, as of June 2017; The Ladakh project will still be the world's largest even after others complete their planned capacities




# சர்வதேசச் செய்திகள்

## மனித உரிமைகள் தொலைக்காட்சி

- லண்டனில் மனித உரிமைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட உலகின் முதல் தொலைக்காட்சி அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டது.
- இது சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் (International Observatory of Human Rights - IOHR) நிறுவப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## மனிதனின் விண்வெளிப் பயண மையம் - இஸ்ரோ

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (Indian Space Research Organisation - ISRO), 2021-ம் ஆண்டிற்குள் இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளும் வகையில் மனித விண்வெளிப் பயண மையத்தை அமைத்துக் கொண்டிருக்கின்றது.
- இப்புதிய அமைப்பு பெங்களூருவில் அமையவிருக்கிறது.
- இது இஸ்ரோவில் உள்ள அனைத்துவித மனிதனின் விண்வெளி நடவடிக்கைகள் தொடர்பான செயல்களுக்கு பொறுப்பானதாக இருக்கும். மேலும் மூத்த விஞ்ஞானி உன்னிகிருஷ்ணன் நாயரை அதன் இயக்குநராகக் கொண்டு ஒரு புதிய மேலாண்மை கட்டமைப்பில் அது செயல்படும்.
- மேலும் இஸ்ரோவின் தலைவர் கே. சிவன் ககன்யான் என்னும் திட்டத்திற்கான இயக்குநராக ஆர். ஹட்டன் என்பவரை நியமித்தார். ஹட்டன் தற்போது பிஎஸ்எல்வி குறைந்த எடை வாகனத் திட்டத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கின்றார்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆறு புதிய வகைப் பல்லிகளுக்கான புகலிடம் - வடகிழக்கு

- ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் வளைந்த கால்களுடைய ஆறு புதிய வகை பல்லியினங்களைக் கண்டறிந்திருக்கின்றனர்.
- ஜெகோஸ் (Geckos) என்பவை ஒரு சிறிய வகை பல்லியினமாகும்.

| உயிரினங்கள் | கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|
| கவுகாத்தி வளைந்த காலுடைய பல்லி | கவுகாத்தி நகர் |
| காஸிரங்கா வளைந்த காலுடைய பல்லி | அசாமின் காஸிரங்கா தேசியப் பூங்கா |
| ஜெயிந்தியா வளைந்த காலுடைய பல்லி | மேகாலயாவின் ஜெயிந்தியா மலைகள் |
| நாகாலாந்து வளைந்த காலுடைய பல்லி | நாகாலாந்தில் உள்ள ஹோரநோமா கிராமம் |
| அபயபுரி வளைந்த காலுடைய பல்லி | அசாமின் பொங்கைகாவோன் மாவட்டத்தில் உள்ள அபயபுரி நகரம் |
| ஜம்புய் வளைந்த காலுடைய பல்லி | திரிபுராவின் ஜம்புய் மலைகள் |

# மாநிலச் செய்திகள்

## அமா கரே LED

- ஒடிசா அரசானது நமது வீடுகளில் LED விளக்குகள் எனப் பொருள்படும் "அமா கரே LED" என்ற மாநிலத்தில் உள்ள 95 லட்சம் குடும்பங்கள் பயன்பெறும் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.
- ஒவ்வொரு பயனாளியின் குடும்பமும் இத்திட்டத்தின் கீழ் நான்கு LED விளக்குகளை இலவசமாக பெற முடியும்.
- இந்த LED விளக்குகள் (ஒவ்வொன்றும் 9 வாட்) தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (National Food Security Act - NFSA) மற்றும் மாநில உணவுப் பாதுகாப்புத் திட்டம் (State Food Security Scheme - SFSS) ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படும்.
- விளக்குகளின் விநியோகம் பீத்தா எனப்படும் ஒடிசாவின் திட்டங்களில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புடைமையையும் இயலச் செய்திடும் மக்கள் அதிகாரம் என்ற திட்டத்திலிருந்து (Peoples Empowerment – Enabling Transparency and Accountability of Odisha Initiatives/ PEETHA) ஆரம்பிக்கப்படும்.

# விளையாட்டுச் செய்திகள்

## கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுகள்

Government of India
Ministry of Youth Affairs and Sports
KHELO INDIA YOUTH GAMES
PUNE, MAHARASHTRA, 2019
Sports Authority of India
13 JANUARY 2019

MEDAL TALLY

| RANK | STATE | GOLD | SILVER | BRONZE | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | MAHARASHTRA | 56 | 44 | 56 | 156 |
| 2 | DELHI | 42 | 27 | 38 | 107 |
| 3 | HARYANA | 33 | 34 | 36 | 103 |
| 4 | KARNATAKA | 19 | 20 | 11 | 50 |
| 5 | UTTAR PRADESH | 19 | 18 | 27 | 64 |
| 6 | TAMIL NADU | 17 | 27 | 14 | 57 |
| 7 | PUNJAB | 15 | 11 | 16 | 42 |
| 8 | KERALA | 10 | 12 | 20 | 42 |
| 9 | WEST BENGAL | 10 | 8 | 7 | 25 |
| 10 | GUJARAT | 9 | 5 | 10 | 24 |

- கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுகளில் போட்டியை நடத்தும்


மகாராஷ்டிரா மாநிலமானது 15 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றி மற்ற மாநிலங்களை விட போட்டியில் முன்னணியில் இருக்கின்றது.

- முதல் மூன்று மாநிலங்கள் பதக்கப்பட்டியலில் 100 பதக்கங்கள் என்ற முத்திரையைக் கைப்பற்றி இருக்கின்றன. இதில் மகாராஷ்டிரா 150 பதங்கங்களைக் கடந்து விட்டது.
- கேலோ இந்தியா இளையோர் விளையாட்டில் 10 வயதான அபினவ் ஷா மிக இளைய வயதில் தங்கப்பதக்கம் வெல்லும் நபரானார்.
- தமிழ்நாட்டின் பாலகுமார் நிதின் மற்றும் கர்நாடகாவின் A.T. தானேஸ்வரி ஆகிய இருவரும் 21 வயதிற்கு உட்பட்ட பிரிவில் 100 முதல் 200 மீட்டர்கள் இரட்டையர் எனும் பிரிவில் போட்டியை நிறைவு செய்து இருவரும் நாட்டின் மிக வேகமான வீரர்களாக உருவெடுத்துள்ளனர்.

# முக்கிய தினங்கள்

## தேசிய இளைஞர் தினம் - ஜனவரி 12

- தேசிய இளைஞர் தினம் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 12-ம் தேதி இந்தியா முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி எனப்படும் விவேகானந்தரின் பிறந்த தின ஆண்டு விழாவினைக் குறிக்கின்றது.
- காலம் முழுவதும் எந்த தத்துவத்திற்காகவும், கொள்கைகளுக்காகவும் விவேகானந்தர் பாடுபட்டாரோ அவரது அந்த தத்துவம் இந்திய இளைஞர்களுக்கு ஒரு மிகப் பெரிய உத்வேகத்திற்கான சிறந்த மூலமாக அமையும் என 1984-ம் ஆண்டில் அரசு கூறியது.
- 1985-ம் ஆண்டிலிருந்து விவேகானந்தரின் பிறந்த தினம் தேசிய இளைஞர் தினமாக அனுசரிக்கப்படுகின்றது.



# இதரச் செய்திகள்

## கட்டாயம் பார்க்க வேண்டிய உலகப் புகழ்பெற்ற தளங்கள்

- பெல்லாரி மாவட்டத்தில் உள்ள ஹம்பி இடிபாடுகள் நியூயார்க் டைம்ஸின் "2019ம் ஆண்டில் பயணம் செய்யப்பட வேண்டிய 52 இடங்கள்" எனும் பட்டியலில் "கட்டாயம் பார்க்க வேண்டிய உலகப் புகழ்பெற்ற தளங்கள்" எனும் பட்டியலில் 2வது இடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- 16-ம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசின் கீழ் இந்நகரம் ஒரு செல்வச் செழிப்பு மிகுந்த நகரமாக விளங்கியது.
- கரீபியத் தீவுகளில் ஒன்றும் அமெரிக்க நிலப்பரப்போடு இணைக்கப்படாததுமான பியுர்டோ ரிகோ இப்பட்டியலில் முதலிடத்தில் இருக்கின்றது.



## உலகத் தமிழ் மாநாடு

- 10வது உலகத் தமிழ் மாநாடு 2019-ம் ஆண்டு ஜூலை 4-ம் தேதி முதல் 7-ம் தேதி வரை நான்கு நாட்களுக்கு சிகாகோவில் நடைபெறும்.
- இம்மாநாடு
  - தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேச அமைப்பு,
  - வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு,
  - சிகாகோ தமிழ்ச் சங்கம்

  ஆகியவற்றால் நடத்தப்பட இருக்கின்றது.
- அமெரிக்க மண்ணில் ஒரு உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட இருப்பது இதுவே முதல் முறையாகும்.
- சிகாகோ சர்வதேசக் கருத்தரங்கானது "கீழடி நம் தாய் மடி" (நமது தமிழ்த் தாயின் மடி – கீழடி அகழாய்வு) என்ற மையக் கருத்துருவுடன் தமிழ் ஆய்வுகளுக்கான கருத்தரங்கின் மீது முக்கிய கவனத்தைச் செலுத்துகிறது.
- மேலும் இம்மாநாடு தமிழ் அறிஞர் போதகர் ஜி.யு. போப் என்பவரது 200வது பிறந்த

தினத்தை முன்னிட்டு அவருக்காக அர்ப்பணிக்கப்படுகின்றது.

*பின்னணி*

- தனி நாயகம் அடிகளின் முயற்சியில் 1966-ம் ஆண்டில் மலேசியாவில் முதல் தமிழ் மாநாடு நடத்தப்பட்டது.
- இவற்றில் மூன்று மாநாடுகளானது 1968, 1988, 1995 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டன.
- 9வது உலகத் தமிழ் மாநாடு 2015-ம் ஆண்டில் மலேசியாவின் கோலாலம்பூரில் நடத்தப்பட்டது.

| Official title | Host city | Host country | Year | Arranged by |
|---|---|---|---|---|
| 1st World Tamil Conference | Kuala Lumpur | Malaysia | 1966 | Thani Nayagam Adigalar |
| 2nd World Tamil Conference | Chennai | India | 1968 | M. Bhaktavatsalam and C. N. Annadurai |
| 3rd World Tamil Conference | Paris | France | 1970 | |
| 4th World Tamil Conference | Jaffna | Sri Lanka | 1974 | |
| 5th World Tamil Conference | Madurai | India | 1981 | M. G. Ramachandran |
| 6th World Tamil Conference | Kuala Lumpur | Malaysia | 1987 | |
| 7th World Tamil Conference | Port Louis | Mauritius | 1989 | |
| 8th World Tamil Conference | Thanjavur | India | 1995 | J. Jayalalithaa |
| 9th World Tamil Conference | Kuala Lumpur | Malaysia | 2015 | |
| 10th World Tamil Conference | Chicago | USA | 2019 | International Association for Tamil Research, FeTNA & Chicago Tamil Sangam |

- - - - - - - - - - - - - - -